[1974 ஏப்ரல் 3

அது இயங்க வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணாமலை அவர்கள் அதிலே மிகப் பெரிய மன நிறைவு அடைவார் என்று எதிர்பார்க்கிறேன்.

Siddha Dspensary in Killiyoor Union

* 724 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state whether the Government have received any representation from the Killiyoor Panchayat Union for the opening of a Siddha Dispensary during the year 1972–73?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தோலையாவேட்டையில் 10 படுக்கைகளுடன் கூடிய ஒரு சித்த மருத்துவமனை திறப்பதற்கான குறிப்பு இந்திய மருத்துவ இயக்குநரால் பெறப்பட்டுள்ளது. போதிய விளக்கங்களுடன் கூடிய திருத்தப்பட்ட குறிப்பு அனுப்புமாறு இந்திய மருத்துவ இயக்குநர் கன்னியாகுமரி மாவட்ட மருத்துவ அதிகாரியை கேட்டுள்ளார்.

திரு. என். டென்னிஸ்: இந்திய வைத்தியமுறையை ஊக்குவிப்ப தற்கும், இந்த மருத்துவ முறையில் சித்த வைத்தியக் கல்லூரியிலிருந்து தேறியவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கவும் இவ்விதமான மருத்துவ மனைகளை ஏற்படுத்துவதற்கு அரசு மானியம் கொடுத்து செயல்பட்டு அதற்கான நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒன்றியத்தினால் நடத்தக்கூடிய இந்த மருத்துவமனைகள் ஒன்று கிராம மருத்துவமனையாகவோ அல்லது ரெகுலர் டிஸ்பென்ஸரி அல்லது பார்ட்-டைம் டிஸ்பென்ஸரி யாகவோ அமைப்பதற்கு இன்றைக்கு இடம் இருக்கிறது. அதற்குத் தேவையான பொருளாதார வசதி அவர்களிடம் இருக்கிறதா என்று உள்ளாட்சித் துறை செயலாளரும், அதற்குப் பின்னர் நிதித்துறை செயலாளரும் பரிசீலித்து, அந்த முறைப்படி ஒன்றியத்திற்கு வாய்ப்பு இருக்கும், அவர்கள் நடத்தலாம் என்று சொல்லி, அவர்கள் நடத்து வதற்கு முன்வந்தால், அப்படி எல்லா வாய்ப்புகளும் இருக்குமானால் அரசு என்ன உதவி செய்யும் என்பதை அப்பொழுதுதான் பரிசீலிக்கலாம்.

திரு. கே. எ. வகாப்: சித்த வைத்தியமுறை மிகச் சிறந்த முறை என்று கூறப்படுகிறது. இதிலே சில ரகசியமான முறைகளை வைத்தியர்கள் வெளியிடுவதில்லை. அவர்கள் பரம்பரையாக இந்த

1974 ஏப்ரல் 3]

ரகசியத்தை வைத்துக்கொண்டிருக்கிற ஒரு முறையாக இருந்து கொண்டிருக்கிறது. அதை வெளியில் கொண்டுவருவதற்கு அரசு முயற்சி எடுத்து, இப்படிப்பட்ட முறைகளை இந்த மருத்துவமனைகள் பயன்படுத்துவதற்கு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நூலிலிருந்து கிடைக்கக்கூடிய உண்மைகள் சில பயிற்சியில் மாத்திரம் இருந்தாலும், நூலில் உள்ள அப்படிப்பட்ட உண்மைகள் ஆராயப்பட்டு, ஆதாரபூர்வமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றை பார்மகோபியா முறையில் மருந்து தயாரிப்பதன் மூலம் அங்கே இடம் பெறச்செய்யலாம். அதேபோன்று ரகசியங்களை யார் தெரிவித்தாலும் அதை ஒப்பு நோக்கி அரசு ஏற்றுக்கொள்ளும்.

Conversion of sea-water into drinking water.

* 725 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Central Government have decided to put up a plant near Madras to convert the sea-water into drinking water; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : கடல் நீரை குடிநீர் ஆக்குகின்ற திட்டத்தை எண்ணூர் நிலையத்தில் உருவாக்க வேண்டும் என்று சில மாதங்களுக்கு முன்பு மத்திய அரசு கூறியிருப்பதாக பத்திரிகையில் செய்தி வந்தது. இது குறித்து மத்திய அரசு நமது அரசுக்கு தகவல் அனுப்பி யிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அவ்வாறு எந்தச் செய்தியும் கிடைக்கவில்லை. ஆனுல் அதற்குப் பதிலாக கல்பாக்கம் அணுமின் சக்தி உற்பத்தி நிலையத்தில் இயல்பாக ஒரு நாளைக்கு ஒரு மில்லியன் காலன் தண்ணீரை, கடல் நீரைக் குடிநீராக மாற்றுவதற்குரிய ஒரு பெரிய அமைப்பை ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவில் இன்னும் மூன்று ஆண்டு காலத்தில் நிறைவேற்றலாம் என்று அவர்கள் கருது கிறார்கள். அது ஒரு பரிசீலனை திட்டமாக இருக்கிறது. அப்படி மூன்று ஆண்டு காலத்திற்குள் அது ஆரம்பிக்கப்பட்டு நிறைவேற்றப் பட்டால், ஒரு வகையில் ஒரு முன்னேடித் திட்டமாக, ஆய்வுக்குரிய